சுருக்கம்

பதவிப் பெயர் மாற்றம்— மாநகராட்சிகளில் உள்ள பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் மகப் பேறு உதவியாளர்கள் மற்றும் சுகாதாரப் பார்வையாளர் ஆகிய பணியிடப் பெயர்கள் மாற்றம்— ஆணை வெளியிடப்படுகிறது

= = = = = = = = = = = = =

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மாந4) துறை

அரசாணை (2டி) எண்:01 நாள்: 06–01–2010

திருவள்ளுவராண்டு 2040,
மார்கழி 22–ம் நாள்

படிக்கப்பட்டது

1. அரசாணை (நிலை) எண்.2151, இந்திய மருத்துவம், ஹோமியோபதி மற்றும் குடும்பநலத்துறை, நாள் 4–11–1988
2. ஆணையர், சென்னை மாநகராட்சி எப்5/3834/2005 நாள் 15–06–2006 மற்றும் 11–10–2006
3. அரசாணை (நிலை) எண்.34, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நப1) துறை, நாள் 03–03–2009
4. நகராட்சி நிர்வாக இயக்குநர் கடித எண்.22884/2009/மாநஅ2 நாள் 27–6–2009 மற்றும் 17–12–2009

ஆணை:-

முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மகப்பேறு உதவியாளர் / பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் (Auxiliary Nurse Midwife / Multipurpose Health Worker (female) பணியிடங்கள் “கிராம சுகாதார செவிலியர் (Village Health Nurse)” எனவும், பெண் சுகாதார பார்வையாளர்/பல்நோக்கு சுகாதாரப் பார்வையாளர். (Lady Health Visitor/Multpurpose Health Supervisor (Female) பணியிடங்கள்“ பகுதி சுகாதார செவிலியர் “Sector Health Nurse” என்றும் பெயர் மாற்றம் செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் பணிபுரியும் சுகாதாரப் பணியாளர்களும், சுகாதார பார்வையாளர்களும், பொது சுகாதார துறையில் பணியாற்றுபவர்களைப் போன்றே கல்வித் தகுதியும், பயிற்சியும், ஒரே விதமான பணியும் மேற்கொண்டு வருவதால், முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பதவிப் பெயர்மாற்றம் செய்துள்ளது போன்று நகராட்சிகளில் உள்ள பதவிகளின் பெயரையும் மாற்றம் செய்து ஆணையிடுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அரசுக்குப் பரிந்துரை செய்திருந்தார். நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலித்து நகராட்சிகளில் உள்ள பணியிடங்களின் பெயர்களை மாற்றம் செய்து மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட ஆணைகள் நகராட்சிகளுக்கு மட்டும் பொருந்துமாறு அமைந்துள்ளது எனவும் அவ்வாணைகளை

சென்னை உள்ளிட்ட அனைத்து மாநகராட்சிகளில் பணியாற்றிவரும் சுகாதாரப் பணியாளர்களுக்கும் நீட்டிக்குமாறு பல்வேறு பணியாளர் நலச் சங்கத்தினர் அரசைக் கோரியிருந்தனர். மேற்படி சங்கத்தினரின் கோரிக்கையினை ஏற்று ஆணைகள் வெளியிடலாம் என சென்னை மாநகராட்சி ஆணையரும் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரும் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளனர்.

4. சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆகியோரது பரிந்துரைகளை அரசு கவனமுடன் பரிசீலித்து, அவற்றை ஏற்று, சென்னை உள்ளிட்ட அனைத்து மாநகராட்சிகளிலும் உள்ள பணியிடங்களின் பெயரினை கீழ்கண்டவாறு பெயர் மாற்றம் செய்து ஆணையிடுகிறது:-

| மாநகராட்சிகளில் தற்போதைய பதவிப் பெயர் | மாற்றப்படும் பதவிப் பெயர் |
|---|---|
| (Auxiliary Nurse Midwife / Multipurpose Health Worker (Female), /Maternity Assistant)<br>ஆக்ஸிலரி உதவி செவிலியர் /<br>பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் மற்றும் மகப் பேறு உதவியாளர் | நகர சுகாதார செவிலியர்<br>(Urban Health Nurse) |
| சுகாதாரப் பார்வையாளர்<br>(Health Visitor) | பகுதி சுகாதார செவிலியர்<br>(Sector Health Nurse) |

(ஆளுநரின் / ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி,
அரசு செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5
ஆணையர், சென்னை/ மதுரை / கோயம்புத்தூர்/ திருச்சி/ திருநெல்வேலி/சேலம்/ திருப்பூர் / ஈரோடு / வேலூர் / தூத்துக்குடி மாநகராட்சி
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–18
மாநில கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை), சென்னை–18
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, குறளகம், சென்னை–600 108
நகல்:-
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை செயலரின் தனிச் செயலர், சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (அந2/நப1/மாந3) துறை. சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (இணையதளம்) துறை. சென்னை–9
இருப்புக் கோப்பு / உதிரி

ஆணைப்படி /அனுப்பப்படுகிறது

பிரிவு அலுவலர்